# பிரித்தானிய தமிழ் மொழிப் பரீட்சைச் சபை
# British Tamil Examination Board (BTEB)

www.bteb.org.uk

## தமிழ் – வாசிப்புப் பரீட்சை

## TAMIL – READING TEST

## தரம் / GRADE : 6

Version D

Additional materials:

Soft Pencil (Type B or HB)

Soft clean Eraser

| Sec | Qts | Attp. | ✓ |
|---|---|---|---|
| P1 | 1-5 | | |
| P2 | 6-10 | | |
| P3 | 11-15 | | |
| P4 | 16-20 | | |
| P5 | 21-25 | | |
| | **Total** | | |

**TIME** 40 Minutes

**INSTRUCTIONS TO CANDIDATES**

Do not open this booklet until you are told to do so.

Answer all questions.

Write your name, Centre number and candidate number in the spaces on this page.

**Write your answers on the question paper itself.**

Use pencil

At the end of the test you must hand in the question paper to your supervisor.

Dictionaries must not be used.

| Date | Centre Name | Centre Number |
|---|---|---|
| / / | | |

| Candidate Name | Candidate : Number |
|---|---|
| | |

This question paper consists of 10 printed pages.

# PART – 1

## QUESTION - 1 - 5

Read the statements given below and choose the correct description A – F to match with the statements. And write the letter in the box.
There is one extra letter you do not need to use.

| | |
|---|---|
| A | பயணிகளின் வாகனங்கள் மட்டும். |
| B | இந்த அலுவலகம் வாரத்தில் ஆறு நாட்கள் திறந்திருக்கும். |
| C | பதினைந்து நிமிடம் புகையிரதக் கடவை மூடப்பட்டுள்ளது. |
| D | இந்த வீதி தற்போது பாவனையில் இருந்து தவிர்க்கப்பட்டுள்ளது. |
| E | பூச்செடிகள் உள்ள பகுதியில் நடக்க வேண்டாம். |
| F | இங்கே நிற்கவும். |

1. If you are using the train you can park your car here ☐

2. This railway gate is closed for 15 minutes. ☐

3. When you walk, stay away from the plants ☐

4. Don not use this road. ☐

5. This office is closed on Sundays

## PART – 2

### QUESTION - 6 - 10

Read the statements given below, and choose the correct description A-F to match with the statements. Write the answer letter in the Box.

**A சங்கிலியன் பூங்கா - Sangeliyan Park**

இலங்கையிலுள்ள சங்கிலியன் பூங்கா மிகவும் பழையது. அதற்கு தனி வரலாறு உண்டு. ஆனால் இன்று அது நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது. இது பழமையும் புதுமையும் கலந்ததாக இன்று காணப்படுகிறது.

**B சுப்பிரமணியம் பூங்கா - Subramaniam Park**

சுப்பிரமணியம் பூங்கா யாழ் நகர மத்தியில் இருக்கும் ஓர் அழகிய பூங்கா. இதற்கு அருகில் பண்ணைக் கடற்கரை இருப்பதால் மக்கள் உடற்பயிற்சி செய்வதற்காகவும், நடப்பதற்கும், கடற்காற்றை சுவாசிக்கவும் இங்கே வருகிறார்கள்.

**C றிச்மண்ட் பூங்கா - Richmand Park**

இலண்டன் நகருக்குள் இருக்கும் பூங்காக்களில் இது மூவாயிரம் ஏக்கர் பரப்பளவு கொண்டது. மக்கள் உடற்பயிற்சிகள், விளையாட்டுக்கள் போன்ற முயற்சிகளை நகரின் மத்தியில் செய்வதற்கு ஏற்ற ஓர் இடமாகும். குறிப்பாக, துவிச்சக்கர வண்டிப் பயிற்சிகளை மேற்கொள்வதற்கு உகந்த இடமாகும்.

**D கில்பேட் பூங்கா - Guilford Park**

இது மிகவும் அடர்ந்த மரங்கள் உள்ள ஓர் பெரிய பூங்காவாகும். இங்கு மரச்சோலை நடுவே மக்கள் தற்காலிக தங்குமிடங்களை அமைத்து விடுமுறைக் காலங்களைக் கழிப்பார்கள்.

**E தோப் பூங்கா - Thorpp Park**

இது சிறுவர்களை மிகவும் கவர்ந்த றோலோ கோஸ்ரர் (Roller Coaster) மற்றும் பெரியோருக்கான மின்சாரக் கார் ஓட்டம் போன்றன கொண்ட ஓர் பிரமாண்டமான பொழுது போக்குப் பூங்கா.

**F செசிங்ரன் பூங்கா - Kensington Park**

இதுவும் இலண்டனில் இருக்கும் ஓர் பிரமாண்டமான பல விதமான காட்சிகள் நிகழ்ச்சிகள் இடம்பெறும் பூங்கா. இங்கு நிறைய மிருகங்களும் இருக்கின்றன. அத்துடன் இதில் விடுதி வசதிகள் மிகவும் சிறப்பாக உள்ளன.

6. I like to visit the oldest park in our homeland. ☐
7. I enjoy going out and being in the woodlands. ☐
8. I prefer to stay in the park which is near the beach. ☐
9. I like to stay in a park resort. ☐
10. I'd like to be able to exercise and to have cycling facilities in the park. ☐

## PART – 3

## QUESTION - 11 – 15

Read the letter from Suthan (சுதன்) to Keeran (கீரன்) and then answer the questions below 11- 15. Choose the picutre A, B or C and put a tick (✓) in the box.

அன்புள்ள கீரனுக்கு,

நான் கடந்த வாரம் இலண்டனில் நடந்த ஒரு தமிழர் விளையாட்டு விழாவுக்கு சென்றிருந்தேன். அங்கு விளையாட்டுப் போட்டிகளுடன் வேறு பல விதமான நிகழ்வுகளும் நிகழ்ந்தன. இலங்கையில் தமிழர் பாரம்பரியங்களைப் பிரதிபலிக்கும் கண்காட்சி, புத்தக விற்பனை, தமிழர் பாரம்பரிய உணவுகள் கொண்ட உணவகம் முதலியன அமைக்கப்பட்டிருந்தன. மேலும் இறுதி நிகழ்வாக பரிசளிப்பு வைபவம் தொடங்கும்போது தாயகத்தில் மரணித்த எம் உறவுகளுக்கான மௌன அஞ்சலி நிகழ்த்தியமை என்னை மிகவும் பாதித்தது. உணவகத்தில் இருந்த உணவுகளில் ஒடியல் கூழ் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. எனது தம்பி நூறு மீற்றர் ஓட்டத்துக்கான, பத்து வயதுக்கு கீழ் பிரிவில் முதலாவது இடத்திற்க்கான பரிசைப் பெற்றான். பெண்களுக்கான புடவைக் கடையில் சேலைகள் மிகவும் பரபரப்பாக விற்பனையாகிக் கொண்டிருந்தன. புத்தகக் கடையில் எனக்கு மிகவும் பிடித்த கம்பர், பாரதி, கண்ணதாசன், பாரதிதாசன், சோமசுந்தரப் புலவர், ஆறுமுகநாவலர் போன்றோரின் புத்தகங்கள் நிறைய இருந்தன. அதில் கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்து மதம் என்ற நூலை நான் வங்கிவந்தேன். மிகவும் சந்தோசமான பொழுதாக எனக்கு இருந்தது.

அன்புடன்,
நண்பன் சுதன்.

11. Where did Suthan go last week?







A ☐ B ☐ C ☐

12. What was the final event of that day?







A ☐ B ☐ C ☐

13. Which food in the restaurant did Suthan like?







A ☐ B ☐ C ☐

14. Who won the first prize in the 100m race?









A ☐ B ☐ C ☐

15. Which book did Suthan buy?










A ☐ B ☐ C ☐

## PART – 4

## QUESTION - 16 – 20

Read the article about **“Climate Changes” (காலநிலை மாற்றங்கள்)**
And read the given statements, tick your answer whether it, Right (A), Wrong (B) or not in the Text (C).

### காலநிலை மாற்றம்

உலகின் சீரான காலநிலை உயிர்களின் வாழ்வுக்கு மிக அவசியம். புவியியல் காரணிகளின் அடிப்படையில் உலகில் பல்வேறு காலநிலைகள் காணப்படுகின்றன. காலநிலையானது காலத்திற்கு காலம் மாறுபட்டு காணப்படும். முன்பனி, கோடை, பின்பனி, மாரி என பிரதானமாக நான்கு வகையான காலநிலைப் பிரிவுகள் உலகில் காணப்படுகின்றன. ஆனாலும் மேலும் சில நுண் அளவிலான பல தனித்துவமான காலநிலை பிரிவுப் பிரதேசங்களும் காணப்படுகின்றன.

இன்று காலநிலையில் பாதிப்புகள் ஏற்பட்டு பருவகால நடவடிக்கைகளில் எதிர்பாரக்க முடியாத அளவுக்கு மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இப் பாதிப்புகளைத் தடுத்து மனித குலத்தை ஆபத்தில் இருந்து காப்பாற்ற பல நாடுகள் இன்று மிகவும் அக்கறையுடன் செயல்படுகின்றன. இதில் பிரதானமாக பூமியின் வெப்ப அதிகரிப்பால் பூமியின் வட, தென் துருவ பனிப்பாறைகள் உருகி கடல் நீர்மட்டம் உயருவது ஓர் ஆபத்தான செயற்பாடு ஆகும்.

16. Climate changes affects only the animals in the world?

A) Right ☐ B) Wrong ☐ C) Not in the text ☐

17. There are only four seasons.

A) Right ☐ B) Wrong ☐ C) Not in the text ☐

18. Flowers and trees are controlling the weather patterns of our planet.

A) Right ☐ B) Wrong ☐ C) Not in the text ☐

19. Global warming is created when the earth’s sea level goes down.

A) Right ☐ B) Wrong ☐ C) Not in the text ☐

20. Most governments are taking action to save the earth from global warming.

A) Right ☐ B) Wrong ☐ C) Not in the text ☐

## PART – 5

**QUESTION - 21 – 25**

Read the given article about **"danger caused by alcohol drinking"** and the answer the questions 21 – 25 below. And choose the correct answer letter A, B or C and put a tick (✓) in the box.

## மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள்

மது அருந்துதல் ஒரு தீய பழக்கம். ஆனாலும் பலர் அதைச் செய்கிறார்கள். பல நாடுகளில் "பதினெட்டு வயதுக்கு மேல் மது அருந்தலாம்" என சட்டம் இருந்தாலும் இளவயதில் மது அருந்துவதால் உடல் நலம் கெட்டு விரைவில் நோயாளியாகவும் வேலைகளைச் செய்ய முடியாதவராகவும் மக்கள் காணப்படுகின்றனர்.

இளவயதில் மது அருந்துவதால் உடலுறுப்புகள் மற்றும் மூளை என்பன பாதிப்படைகின்றன. இதனால் கல்வி பாதிக்கப்படுகிறது. இளவயதில் கல்வி பாதிக்கப்படுவதால், வாழ்வின் முன்னேற்றம் தடைப்படுகிறது. வாழ்வின் முன்னேற்றம் தடைப்படுவதால், குற்றங்களில் ஈடுபட முனைந்து இளவயதிலேயே குற்றவாளிகளாகச் சிறைசெல்லும் அபாயத்துக்கும் ஆளாகின்றனர்.

மது அருந்துவது அதை அருந்துபவருக்கு மட்டுமல்ல மற்றோருக்கும் இடையூறாக இருக்கின்றது. குறிப்பாக மது அருந்திவிட்டு தடுமாற்றத்துடன் வாகனம் ஓட்டுபவர்களால் பல மக்கள் பலியாகின்றனர்.

மது அருந்துதல் இளவயதினருக்கு மட்டுமன்றி பெரியவர்களுக்கும் கூட நோய், பணச்செலவு, கடமை தவறுதல், வருமான நஷ்டம், மற்றோர் முன் அவமானம் போன்ற பலவிதமான பின்னடைவுகளுக்குக் காரணமாகின்றது. ஆதலினால் மதுப்பழக்கத்தை அறவே தவிருங்கள்.

"இளமையில் மது விஷத்துக்கு ஒப்பாகும்"

21. Drinking alcohol is bad for your

A) General Health ☐
B) Liver ☐
C) all above ☐

22. Using alcohol at a young age will

A) Damage your brain ☐
B) Increase the Chances of going to prison ☐
C) Both of the above ☐

23. What is the legal age limit for alcohol drinking in the UK?

A) 16 Years ☐
B) 18 Years ☐
C) 21 Years ☐

24. Who is affected by drink drivers?

A) Driver ☐
B) Passengers ☐
C) Road users and all of above ☐

25. If an adult drink alcohol, what will be affected?

A) Income ☐
B) Family life ☐
C) Reading a book ☐

- BLANK PAGE -

- BLANK PAGE -